**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.67/2024 - PW-2**

| | |
|---|---|
| Name | திருமதி. நாகம்மாள் |
| Husband/Father Name | அண்ணாமலை |
| Village /Area | புதுப்பட்டு |
| Taluk | நெமிலி |
| Occupation | கூலி |
| Age | 56 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 26.11.2025.

**(1–ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 3 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த பாஸ்கரன் என்னுடைய இளைய மகன். அசா.1 என்னுடைய மூத்த மகன் ஆவார். கடந்த 08.11.2016 அன்று நானும் என்னுடைய மகன் பாஸ்கரனும் வீட்டில் இருந்த போது அப்போது ராமு மற்றும் மணிகண்டன் என்பவர்கள் இரு சக்கர வாகனத்தில் மாலை 03.00 மணியளவில் வந்து எங்கள் வீட்டில் இருந்த பாஸ்கரனை உடன் அழைத்து சென்றார்கள். அன்றிரவு என் மகன் பாஸ்கரன் திரும்ப வீட்டிற்கு வரவில்லை.

இது குறித்த என் மகனை அழைத்து சென்ற ராமு மற்றும் மணிகண்டனிடம் கேட்ட போது சரியாக பதில் கூறாமல் தெரியாது என்று கூறினார்கள். பிறகு என் மகனை காணவில்லை என்று என் உறவினர்களின் வீட்டிற்கு சென்று தேடிப் பார்த்தோம். எங்கும் என் மகன் கிடைக்கவில்லை. நாங்கள் என் மகனை தேடும் போது என் மகள் சுமதி காதில் விழும் படி ராமுவும், மணியும் **"நாம பாஸ்கரனை அடித்துப் போட்ட இடம் புதூர் பெருமாள் ஏர்க்கரை பக்கம் என்றும் இவர்கள் எங்கெங்கோ தேடுராங்க"** என்று பேசுவதை என் மகள் சுமதி கேட்டு என் மகன் முரளியிடம் கூறினார்.

பிறகு அவர்கள் பேசிய புதூர் பெருமாள் ஏர்க்கரைக்கு என் மூத்த

மகன் முரளி மற்றும் பேரன் அரிதாஸ் சென்று பார்த்த போது என் மகன் பச்சை கலர் கோடு போட்ட சட்டை மற்றும் கருப்பு கலர் பேண்ட் அணிந்து இறந்த நிலையில் கை, கால்கள் விரைப்பு தன்மையுடன், தலையில் காயத்துடன், நெஞ்சில் குத்துக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்து காணப்பட்டார். இது குறித்து உறவினர்களுக்கு, காவேரிப்பாக்கம் காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுத்தோம்.

பின்னர் எனது மகனுடைய இறப்பிற்கு காரணம் இராமு மற்றும் மணிகண்டன் என்று கேள்விப்பட்டேன். ஆஜர் எதிரிகள் எனது மகனுடன் ஒன்றாக சேர்ந்து வெளியே சென்று வருவது வழக்கம்.

இது குறித்து நானும் என்னுடைய மூத்த மகன் முரளி என்பவரும் காவேரிப்பாக்கம் காவல் நிலையத்திற்கு சென்று என் மகன் பாஸ்கரன் காணவில்லை என்று என் மூத்த மகன் முரளி புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** செய்யப்படவில்லை.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.26 16:20:30 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.